# வாழ்விக்கும் வைணவம்

வைணவச் சுடராழி டி.ஏ. ஜோஸப், பாண்டிச்சேரி
18, Fourth Cross (Upstairs), Rainbow Nagar, Pondicherry 605 011
Website: http://dajoseph.50megs.com Email: deyeje@yahoo.com

வைணவத்துக்கு வந்தவன் உலகைத் துறந்து திருவோடும் தெருவுமாகத் தான் அலைய வேண்டுமா? இப்படி ஒரு பயம் நம்மில் பலருக்கு இருக்கிறது. ஸ்ரீராமாநுஜரையும் அவருடைய சீடர்களையும் பற்றிப் படித்து விட்டு அத்தனையும் பின்பற்றினால் ஆண்டியாகத் திரிய வேண்டியிருக்குமோ என்ற ஒரு அச்சம் சில உள்ளங்களில் எழுகிறது. பரம்பரை வைணவக் குடும்பத்தில் பிறந்தவர்கள் கூட ஓரளவிற்கு மேல் ஆன்மிகம் வேண்டாம் என்று எட்ட நின்று கொள்ளுகிறார்கள். வைணவம் வறுமையைக் கொடுக்குமா? வாழ்வினைக் கொடுக்குமா? இந்தக் கேள்விக்கு பலநூறு ஆண்டுகளுக்கு முன் திருமங்கை மன்னன் பதில் கூறியிருக்கிறார். திருமால் பெயரைச் சொல்லத் தொடங்கினாலே திருமகள் தேடி வருவாள் என்கிறார். வைணவம் நமக்கு வழங்குவது என்னென்ன என்று பட்டியலிட்டிருக்கிறார்.

1. குலம் தரும்: 'கழிந்த பிறப்புக்களில் செய்த பாவம் என்னவோ, இப்படி சீர்க் கெட்டுப் பிறந்திருக்கிறானே' என்று வருந்துவோர் பலர். நீங்கள் எந்தக் குலத்தில் பிறந்திருந்தாலும் குடிப் பிறப்பினால் உயர்வு பெறுவதற்கு நீங்கள் இன்னொரு ஜன்மம் வரை பொறுத்திருக்க வேண்டியதில்லை. இப்பிறவியிலேயே உயர்ந்த குலம் அடைவதற்கும், விச்வாமித்திரன் போல் பல்லாயிரம் ஆண்டுகள் பாடுபட வேண்டியது மில்லை. இன்றே! இங்கேயே! இப்போதே! நாராயணனுக்கு நான் அடிமையென்று அவன் பெயர் சொன்னாலே போதும். உலகின் எல்லா குலங்களையும் விட உயர்ந்த குலமான தொண்டக் குலத்தை அடைவாய்! வேடனும் வேந்தனும் ஆணும் பெண்ணும் அந்தணரும் அடுத்த இனங்களும் இந்த நாராயணக் குடும்பத்தில் சம அந்தஸ்தை பெறுவர். ஸ்ரீவைஷ்ணவ உலகத்தில் ஒரு பாணரை ஒரு அந்தணர் முதுகிலே சுமப்பார். ஒரு அந்தணர் ஒரு கீழ்க் குலத்தோருக்கு ஈமக்ரியைகள் செய்வார். இப்படி அதிசயங்களை எல்லாம் ஸ்ரீவைஷ்ணவத்தில் நீங்கள் பார்க்கலாம். இந்த வாழ்வுக்கும் வைணவம் இன்னும் என்ன என்ன தரும் என்று ஆழ்வாரே அட்டவணை இடுகிறார்.

2. செல்வம் தந்திடும்: பணமும் பக்தியும் இரு வேறு துருவங்கள் என்பர். கோடீஸ்வரன் கோவணாண்டியாகி கோயிலுக்குப் போனாலே ஒழிய கோவிந்தன் அவனிடம் நெருங்க மாட்டான் என்பது பொதுவிதி. ஆனால் வைணவம் காட்டும் பாதை கவர்ச்சியானது. வைராக்யம் இருந்து விட்டால் செல்வம் வைகுண்டத்தையும் தரும் – வழிமுறையாய் வாழ்ந்தால்! என்கிறது வைணவம்.

அரக்கன் விபீஷணன் ஆழ்வானாகி அடி சேர்ந்த போது ராமன் அவனை இலங்கைக்கு அதிபதியாக்கினான். அண்ணனின் கொடுமை தாளாது ஆதரவு தேடிவந்த சுக்ரீவனை கிஷ்கிந்தைக்கு ராஜாவாக்கினான். இவர்களுக்கு பூவுலகச் செல்வம் அவர்கள் புனித உலகம் போகத் தடையாய் இருக்கவில்லை. ராஜரிஷி ஜனகன் ஞானத்துக்கு அரசனாய் வாழ்ந்தது வையத்தோருக்கு ஒரு முன் உதாரணம் என்கிறது வைணவம். ஸ்ரீ குடியிருக்கும் ஸ்ரீநிவாசனாய் திருவேங்கட முடையானாய் செல்வத்தை வாரி இறைப்பது விஷ்ணுதானே?

3. படுதுயர்போக்கும்: ஊறிய, ஊறுகின்ற, ஊறப்போகிற காயினை ஊறுகாய் என்பதுபோல சஞ்சிதம், ப்ராரப்தம், ஆகாமி என்று முக்காலத்திலும் நம்மை வாட்டுவதே நோக்கமாய் இருக்கும் நம் கர்மவினை நமக்குத் துன்பம் தராதபடி திருமால் காத்தருள்வார், நாம் அவர் தொண்டரானால் என்கிறார் ஆழ்வார். அடியார் படுதுயர் ஆயினவெல்லாம் நிலந்தரம் செய்யும்! துன்பங்கள் நம்மை துளைப்பது ஜாதகத்தையும் நவக்ரஹங்களையும் பெரிய பரிகாரங்களாக நம்பி அலைகிற வரைதான். நாரணன் அடியார்க்கு நாளென்ன கோளென்ன என்று துணிந்து விட்டால் துன்பம் இல்லை. எல்லா நாளும் நல்லநாளே, எல்லா நேரமும் நல்ல நேரமே. பஞ்சாங்கம் பார்த்தா திருமங்கையாழ்வார் பணம் தேடினார்? கோள் நிலை பார்த்தா கோயில் கட்டினார்? ஒரே ஒரு சொல் – நாராயணா என்னும் நாமம். அதை நம்பித்தான் ஒவ்வொரு காரியத்திலும் காலை வைத்தால் அவருக்கு ஜெயமாகாத செயல் ஏது?

4. நீள் விசும்பருளும்: பரமபதம் அடைய வேண்டும் என்பதல்லால் பலவகை நோக்கங் களோடு பெருமாளைத் தொழுதாலும் பேரின்பமே கிட்டும் என்கிறார் பெரியதிருமொழி பாடிய இந்தப் பெரியவர். சொர்க்கம் வேண்டுமா? யோகிகள் விரும்பும் கைவல்யம் வேண்டுமா? சாலோக்ய சாரூப்ய மோக்ஷங்கள் வேண்டுமா எந்தப் பதவியானாலும் ஏற்றமுடன் பெறுவீர் – ஏழுமலையான் அருளால்! பதினான்கு லோகங்களிலும் நாம் அடையமுடியாத பதவியில்லை பார்த்தசாரதி மனம் வைத்தால்!

5. அருள் நிலம் தரும்: பிறப்பிறப்பைக் கடந்து விட்டால் போதும் என்று நினைப்பது தவறு. மரணமிலாப் பெருவாழ்விலும் தாரதம்யம் உண்டு. பலநிலைகள் உண்டு. தன்னைத் தானே அனுபவித்துக் கொண்டிருக்கும் கைவல்ய முக்தியைவிட பரமாத்மாவுக்கு ஜீவாத்மா தொண்டு செய்யும் சாயுஜ்ய மோட்சம் சிறந்தது. ஆனால் அதை அடைவது மிகக் கடினம் . பரமன் அருளன்றி அந்தப்பதம் கிட்டாது யார்க்கும்! அதை மிகச் சுலபமாக நமக்கு அடைவிப்பது வைணவம். 'இது தவறு' என்று இராவணனைத் தட்டிக் கேட்டுத் தடுத்து நிறுத்திய காரணத்துக்காக ஒரு பறவைக்கு ராமன் அதைக் கொடுத்தான். கூட நின்று கூச்சலிட்டு ராவணன் சைனியங்களைக் கடித்துக் குதறியதற்காக குரங்குகளுக்குக் கூட அந்த தசரத குமாரன் அதைக் கொடுத்தான். அதை வேண்டும் என்று கூடக் கேட்காமல் வேறு பக்கம் பார்த்து சண்டை போட்டுக் கொண்டிருந்த வாலியை மறைந்து நின்று கொன்று அவனுக்கு அந்த வீட்டரசைக் கொடுத்தான். பானைக்கு கொடுத்திருக்கிறான். பானையைச் சுமந்த யாதவனுக்குக் கொடுத்திருககிறான். காலில் மிதிபட்ட கல்லுக்கும் புல்லுக்கும் கூட மோட்சம் கொடுத்திருக்கிறான் – அவை கேட்காமலே! வைணவத்துக்கு வந்து விட்டால் வைகுண்டம் என்பது அனைவருக்கும் இலவச போனஸ். நீங்கள் செய்ய வேண்டியது சரணாகதி. அடைய வேண்டியது ஒரு ஆசாரியன் திருவடி.

6.வலம் தரும்: 'தமஸோமா ஜோதிர்கமய' என்கிறது உபநிடதம். இருளில் இருந்து வெளிச்சத்திற்கு வாருங்கள். இயலாமையில் இருந்து வெளிவந்து ஆற்றலை அடையுங்கள் என்கிறது. அதைத்தான் இங்கே வைணவம் வழங்குகிறது. வலிமை பெறுவீர்! வளமை பெறுவீர்! பலம் பெறுவீர்! பயன்கள் பெறுவீர்!

7. மற்றும் தந்திடும்: காலத்துக்குக் காலம் விஞ்ஞானம் மாறுகிறது. வேறுபாடுகள் நிகழ்கின்றன. இந்தக்கால குதர்க்க இளைஞன் வைணவன் எனக்கு கம்ப்யூட்டர் தருமா? இண்டர்நெட் தருமா? என்று கேட்பான் என்று மங்கை மன்னனுக்கு முன்பே தெரியும். அதனால் தான் மனிதன் மனத்தால் என்னென்ன ஆசைப்பட முடியுமோ அவ்வளவும் தரும் என்று 'மற்றும் தந்திடும்' என்றார் பொதுப்படையாக. பொன், மண், பெண், மாப்பிள்ளை, மகன், மகள், வீடு, நிலம், கல்வி, பதவி இன்னும் என்னென்ன முடியுமோ அத்தனையும் பட்டியல் போட்டு ஆழ்வாரிடம் நீட்டுங்கள். அதை அவர் பெருமாளிடம் சமர்ப்பிப்பார். உங்களுக்கு எல்லாம் உடனடியாக அனுக்ரஹிக்கப்படும்.

8. தாயினும் நன்மை செய்யும்: தாய்க்கு மிஞ்சிய பந்தமில்லை. அன்புக்கும் கருணைக்கும் அவள் எல்லை நிலம். ஆனால் ஆழ்வார் இங்கே அவளையும் மிஞ்சி, பவளக் கண்ணன் பரிவு காட்டுவான் என்கிறார். அது எப்படி? தாய்க்கு ஒரு குறை கற்பிக்க வேண்டுமானால் அது அவளிடம் உள்ள பரிவும் பாசமும் தான். மிதமிஞ்சின அன்பினால் தன் பிள்ளையின் குறைபாடுகள் அவள் கண்களுக்கு தெரிய மாட்டா. கண்டிக்க வேண்டிய சமயத்தில் கூட கனிவைப் பொழிபவள் அவள். பல வீடுகளின் பிள்ளைகள் கெட்டு சீரழிவதன் காரணம் அதுதான். ஆனால் பகவான் அப்படி இருக்க மாட்டான். கனிவுக்கு ஒரு வேளை, கண்டிப்புக்கு ஒரு வேளை என்று விகிதாச்சாரம் அறிந்தவன் அவன். யாரும் கெட்டுச் சீரழிய அவன் விட்டதில்லை. அவன் பக்தரில் யாரே தீயவழியில் சென்று துன்புற்றார்? துயர் உழந்தார்? அதனால் தான் பெற்றதாயினும் ஆயின செய்யும் என்கிறார்.

9.நலம் தரும் சொல்: வைணவத்தில் ஒரு சிறப்பு என்னவென்றால் வள்ளன்மையில் பகவானுக்குச் சமமானது அவனுடைய நாம மஹிமை. திரௌபதிக்கு சேலை கொடுத்தது கண்ணனா அவன் நாமமா என்று சர்ச்சையெல்லாம் இங்கே உண்டு. வாசக ப்ரபாவமா வாச்யப்ரபாவமா என்று பெரிய சண்டையெல்லாம் இங்கே சகஜம். அந்த அளவுக்கு பகவானுடைய பெயர்கள் நலம் தருபவை. அதனால் தான் அவன் நாமாவை நலம் தரும் சொல் என்கிறார் இந்த நாராயணன் அடியார். திருமாலைத் தொழுவதற்கு ஆலயம் செல்ல வேண்டும். திருநாமம் சொல்வதற்கு இருக்கும் இடமே போதும். படுத்துக் கொண்டு, சிரித்துக் கொண்டு, நின்று கொண்டு, குதித்துக் கொண்டு, சின்னத்திரை நோக்கி விழித்துக் கொண்டு எப்பொழுது வேண்டுமானாலும் அவனுடைய நாமாவைச் சொல்லலாம். மாத விலக்கான காலத்தில் திரௌபதி அவன் பெயரை பயன்படுத்தினாள். வெட்டப்பட்டு பிணங்கள் விழும் யுத்த களத்தில் அர்ஜுனன் அதை பயன்படுத்தினான். அவன் நாமத்தைச் சொல்ல கால நியதி இல்லை. வருண நியதி இல்லை. அந்தஸ்து பேதம் இல்லை. வேத அறிவு தேவையில்லை. கிளி கூட அந்தப் பெயரைச் சொல்லி மோட்சம் போகலாம்.

இவ்வளவு அதிகப் பலனைத் தரும் அவன் நாமங்களோ அனைவருக்கும் சொந்தம். விலையோ குறைவு, தரமோ அதிகம் என்று விளம்பரப்படுத்தும் வியாபாரி கூட இதன் மஹிமையைப் புரிந்து கொண்டால் இவ்வளவு சலுகையா என்று வியந்து போவான். ஏழுகடல் ஏழுமலை தாண்டிப் போனால் கிடைக்கும் மந்திர குளிகைகளை விட பகவானுடைய நாமம் மஹிமை வாய்ந்தது, எளிமை வாய்ந்தது. அதனால்தான் திருமங்கை ராஜா "நான் கண்டு கொண்டேன்" என்று கூவுகிறார். கோடிக் கணக்கில் தங்கம் கொட்டிக் கிடந்தால் அதைப் பார்ப்பவன் கூவாமல் என்ன செய்வான்? அப்படி ஒரு பாவனை தொனிக்கிறது அவருடைய குரலிலே. ஒருமுறை அந்தப் பாசுரத்தை முழுவதும் படித்துப் பாருங்கள். திருமங்கை யாழ்வார் அருளிச் செய்த பெரிய திருமொழி முதல்பதிகத்தில் ஒன்பதாம் பாசுரம் இதோ:

குலந்தரும் செல்வந்தந்திடும் அடியார்
படுதுயர் ஆயினவெல்லாம்
நிலந்தரஞ்செய்யும் நீள் விசும்பருளும்
அருளொடு பெருநிலமளிக்கும்
வலந்தரும் மற்றுந் தந்திடும் பெற்ற
தாயினு மாயின செய்யும்
நலந்தருஞ்சொல்லை நான் கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்

வாரி வழங்க வைணவம் காத்திருக்கிறது. அது வழங்க வந்த மதம், வாட்ட வந்த மதமல்ல. கொடுக்க வந்த கோட்பாடு, எடுக்க வந்த பிசாசல்ல, 'கலியும் கெடும் கண்டு கொண்மின்' என்று நம்மாழ்வார் சொன்னது போல ஸ்ரீராமாநுஜரின் கருணையினால் இன்று வைணவம் நம் அனைவருக்கும் கிட்ட இருக்கும் குளிர்நீர் ஓடைபோலே அருகில் இருக்கிறது. அனைவரும் வாரீர் – அள்ளிப் பெருக! ஆனந்தம் பெறுக!